**அனகாபுத்தூர் நகராட்சி**

**<u>சென்னை – 600 070.</u>**

<u>கூட்ட எண்.75/2021</u> <u>நாள். 31.08.2021</u>

**<u>தனி அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2021 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்</u>**

31.08.2021ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரணக் கூட்டப் பொருள் .

**<u>பொருள் எண். 1</u>**

அனகாபுத்தூர் நகராட்சி ஆகஸ்ட் 2021 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**<u>பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்</u>**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | ஆகஸ்ட் 2021 | 0 | 0 | 6 | 10 | இல்லை | இல்லை |

**<u>பொருள் எண். 2</u>**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2021 மாதத்தின் நாட் குறிப்புகள்.

**<u>அலுவலக குறிப்பு :</u>** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**<u>பொருள் எண். 3</u>**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை அறிவிப்பு நாள் 24.08.2021ன்படி தாம்பரம் நகராட்சிக்கு அருகில் உள்ள பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம் ஆகிய நகராட்சிகள், சிட்லபாக்கம், பெருங்களத்தூர், மாடம்பாக்கம், தீருநீர்மலை, பீர்கன்கரனை ஆகிய பேருராட்சிகள் மற்றும் திருவஞ்சேரி, அகரம்தென், மதுரம்பாக்கம், ஒட்டியம்பாக்கம், சித்தலாபாக்கம், பெரும்பாக்கம், வேங்கைவாசல், நன்மங்கலம், கோயிலம்பாக்கம், மூவரசம்பட்டு, திரிசூலம், கவுல் பஜார், பொழிச்சலுார், முடிச்சூர் ஆகிய கிராம ஊராட்சிகளை சேர்த்து தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அரசு கூடுதல் தலைமை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை சென்னை அவர்களின் காணொளி காட்சி அறிவுரைகளில், தாம்பரம் நகராட்சியுடன் அனகாபுத்தூர் நகராட்சியை இணைக்க இசைவு தெரிவித்து உரிய தீர்மானம் நிறைவேற்றி அரசிற்கு அனுப்பிவைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே அனகாபுத்தூர் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் தாம்பரம் நகராட்சியுடன் இணைக்க இசைவு தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** தாம்பரம் நகராட்சி எல்லைக்கு அருகில் உள்ள 4 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதும் 2011 மக்கள் தொகை கணக்கு எடுக்கின்படி 48050 மக்கட் தொகை கொண்ட அனகாபுத்தூர் நகராட்சி பகுதிக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதி மற்றும் இதர உட்கட்டமைப்புகளை ஏடுபடுத்த ஏதுவாக 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4ன் வகைமுறைகளின்படி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் தாம்பரம் நகராட்சியுடன் அனகாபுத்தூர் நகராட்சியை இணைக்க மன்றம் இசைவு வழங்கலாம்.

**பொருள் எண். 4**

அனகாபுத்தூர் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020–21ம் ஆண்டில் 2 சிப்பம் சாலை பணிகள் ரூ.300.00 இலட்சத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 28 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.20557/2020/இ3 நாள்.14.12.2020ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, உரிய வழிமுறைகளை பின்பற்றி 05.02.2021ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது அனகாபுத்தூர் நகராட்சியில் மொத்தம் 44.59 கி.மீட்டரில் 389 சாலைகள் உள்ளன. இதில் அனைத்து சாலைகளிலும் பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் பணி தொடங்கப்பட உள்ளது. சிறப்பு சாலைகள் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட சாலைகளின் விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பணியின் விவரம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1. | **சிப்பம் – I** | |
| | 1. வார்டு எண்.02 – திருவள்ளுவர் பேட்டை தெரு | பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| | 2. வார்டு எண்.04 – குருசாமி நகர் 1வது தெரு | பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| | 3. வார்டு எண்.04 – குருசாமி நகர் இராஜாஜி தெரு | பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| | 4. வார்டு எண்.04 – குருசாமி நகர் 4வது தெரு 1வது குறுக்குத் தெரு | பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| | 5. வார்டு எண்.04 – வெங்கடேஸ்வரா நகர் பாரதிதாசன் தெரு | பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| 2. | **சிப்பம் – II** | |
| | 1. வார்டு எண்.05 – பாலாஜி நகர் 10 வது தெரு | பணி தொடங்கப்பட வேண்டும். |
| | 2. வார்டு எண்.05 – பாலாஜி நகர் 11 வது தெரு | பணி தொடங்கப்பட வேண்டும். |
| | 3. வார்டு எண்.05 – திருநகர் பிரதான சாலை | பணி தொடங்கப்பட வேண்டும். |
| | 4. வார்டு எண்.07 – அண்ணா நகர் 9வது குறுக்குத் தெரு | பணி தொடங்கப்பட வேண்டும். |
| | | பணி தொடங்கப்பட வேண்டும். |
| | | பணி தொடங்கப்பட வேண்டும். |
| | | பணி தொடங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 5. வார்டு எண்.14 – எல்.ஐ.சி காலனி 8வது தெரு<br>6. வார்டு எண்.17 – குறிஞ்சி தெரு<br>7. வார்டு எண்.13 – காமாட்சி நகர் 2வது தெரு<br>8. வார்டு எண்.16 – வள்ளலார் மெயின் ரோடு<br>9. வார்டு எண்.16 – செந்தமிழ் சாலை<br>10. வார்டு எண்.17 – திருமலை நகர் 5வது தெரு<br>11. வார்டு எண்.17 – புரட்சிமணி தெரு<br>12. வார்டு எண்.17 – கணபதி தெரு | பணி முடிக்கப்பட்டுள்ளது.<br>பணி முடிக்கப்பட்டுள்ளது.<br>பணி முடிக்கப்பட்டுள்ளது.<br>பணி தொடங்கப்பட வேண்டும்.<br>பணி தொடங்கப்பட வேண்டும். |

மேலும் 31.07.2021ம் தேதியில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில், அனகாபுத்தூர் மற்றும் பம்மல் நகராட்சிகளுக்கு ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டம் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருவதால், தற்போது முடிக்கப்படாத சாலை பணிகளை நிறுத்த அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் நடைபெறும் 2020–21 சிறப்பு சாலைகள் திட்ட பணிகளின் கீழ் முடிக்கப்படாத சாலை பணிகள் அனைத்தும் இரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 5</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.17, அன்னை குடியிருப்பு வளாகத்தில் பழுதடைந்த 3 மின் கம்பங்களை மாற்றி அமைத்தல் மற்றும் மீதமுள்ள 20 மின் கம்பங்களுக்கு வர்ணம் பூசுதல் பணி | 1.00 |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு (Rain Water Harvesting) அமைத்தல் பணி | 5.00 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 6</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.15, கல்மடுவு பகுதியில் கொட்டப்பட்டுள்ள உலர் கழிவுகளை தனியார் வாகனம் மூலம் அகற்றுதல் பணி | 9.50 |
| 2. | வார்டு எண்.15, கல்மடுவு பகுதியில் கொட்டப்பட்டுள்ள உலர் கழிவுகளை தனியார் வாகனத்தில் குப்பைகளை ஏற்றி நிரப்ப HITACHI வாகனம் அமர்த்திடுதல் பணி | 3.00 |

<u>**அலுவலகக்குறிப்பு**</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>**பொருள் எண். 7**</u>

06.08.2021ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.02, பக்தவச்சலம் பிரதான குறுக்கு தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி | 1.70 | கே. ஜெயசீலன்<br>ஜி. சுரேஷ் | 0.10 % குறைவு<br>1.50 % அதிகம் |

<u>**அலுவலகக்குறிப்பு**</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி